முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் காரி பகவான் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

03.02.2019, ஞாயிற்றுக்கிழமை

1. **வரமிக்க ஞானியே அரங்கா**
**வாழும் தவசியே குருராசா**
**அறம் பெருக்கி கலிகால இடரை**
**அகற்ற வந்த ஞானதேசிகா**
2. தேசிகா உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் ஒளி சூட்சும நூலை
ஆசிபட **விளம்பி கலை திங்கள்**
**அறிவிக்க இருபான்திகதி கதிர் வாரம்**
**(விளம்பி வருடம் தை மாதம் 20ம் நாள் 03.02.2019, ஞாயிற்றுக்கிழமை)**
3. வாரமதில் காரி பகவான் யானும்
வழங்குவேன் உலகோர் நலமுற
சோரமான காரி காலம் கண்டு
சோடை பீடை கஷ்டம் காணும் மக்கள்
4. மக்களெலாம் அரங்க ஞானியின்
மாதரும வேலிக்குள் வந்து
ஆக்கமுடன் பொருளுதவி செய்து
அடியவர்களாகி தொண்டாற்ற
5. ஆற்றவே காரி காலம் ஆன
அட்டமம் நாட்டவன் கட்டம் யாவும்
மாற்றமாகும் துன்பம் இன்றி
மண்ணுலகில் வளர்ச்சி நிலை காணும்
6. காணவே அரங்கன் காட்டும்
காப்பான சைவநெறி ஏற்று
ஞானவழி ஆறுமுகன் வழிபாடு
நாளும் செய்யும் மக்களை
7. மக்களை துன்பம் அணுகா காப்பேன்
மாதவசி சீடர்கள் என்பவர்க்கு
தேக்கம் வாரா நல்வழி காட்டுவேன்
தொடர்ந்து அரங்கன் வழி வர
8. வருகவே அரங்கன் கரம்பட
வருபவர்க்கு யானும் அருளுவேன்
முருகா என அயச்சகடை தேட்டு
மாதன சூதகவழி தேட்டு செய்யும்
9. செய்யும் அனைத்து மக்களும்
சேவித்து ஞானவழிக்கு வர
அய்யமற தருமபலம் பெருக்கி
அரங்க ஞானி வந்த நோக்கறிந்து

10. அறிந்து தீட்சை ஆசிபட
அனைத்து தேசங்களிலும் பரப்ப
தெரியவரும் ஞானயுக மாற்றம்
தேசிகன் மூலம் நடக்கும்

11. நடக்கவே ஞானச்சுடராக
ஞானியாக முருகனாக வந்த
அடயோகி அப்பனே தேசிகா உன்
அருள்பெற உலகமே தேறும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் சனிபகவான் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

எல்லையில்லாது வரங்களை பெற்றிட்ட மகா ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே கலியுகத்தின் வாழும் தவசியே உலகினில் மக்களை வழிநடத்தும் சற்குருவே குருராசனே உலகினில் தர்மத்தை வளர்த்து கலிகால துன்பங்களை போக்கி மக்களை காக்கவே முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட மகா ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் தை மாதம் 20ம் நாள் 03.02.2019, ஞாயிற்றுக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே காரி பகவான் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் காரிபகவான் என்கிற சனி பகவான்.

பல்வேறு துன்பங்களை தருகின்ற சனி கிரகதோஷம் கண்டு ஏழரைச் சனியினால் பீடிக்கப்பட்டு துன்பங்களையும் நோய்களையும் கஷ்டங்களையும் காணும் மக்கள் எல்லாம் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் வல்லமைமிக்க தருமங்களிலே பங்கு கொண்டு பொருளுதவிகள் செய்தும், தொண்டுகள் செய்தும் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அருளாசிகளைப் பெற்று அரங்கனின் தருமவேலிக்குள் வந்து அரங்கனின் அடியவர்களாக ஆகி தொண்டுகள் செய்து வரவர, சனி திசை நடக்கும் ஏழரைச் சனியின் துன்பங்களில் இருந்தும், அஷ்டமத்து சனியின் துன்பங்களில் இருந்தும் விடுபட்டு சனிக்கிரகத்தினால் வருகின்ற துன்பங்களில் இருந்து மீள்வார்கள். அவர்களது துன்பங்கள் நீங்கி இவ்வுலகினில் நல்வாழ்வை வாழ்ந்து வளர்ச்சியடைவார்கள். கலியுக ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் அருளிய தூயநெறியினை பின்பற்றி உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, சுத்த சைவ உணவை மேற்கொண்டு தினம்தினம் மறவாமல் ஞானிகளை பூஜித்து வரவர, ஞானிகளை வணங்குகின்ற மக்களை அரங்கனின் தூயநெறி ஏற்றிட்ட மக்களை சனிபகவான் நானும் அவர்களுக்கு துன்பம் அணுகாமல் காத்து அருள்புரிவேன்.

மகா தவசி ஆறுமுக அரங்கமகா தேசிகனின் தொண்டர்களாகிய அனைவருக்கும் சீடர்களுக்கும் அவர்களது வாழ்வினில் தடைகள் ஏதும் இன்றி தடையகற்றி நல்வழி காட்டி துணையாய் சனி யானும் உடனிருப்பேன், தொடர்ந்து அரங்கனைப் பின்தொடர்ந்து அரங்கன் திருவடி பணிந்து அரங்கன் கரம்பட தீட்சை உபதேசம் அடைந்து வருபவர்களுக்கு சனி யானும் அருள் செய்து நிற்பேன்.

முருகப்பெருமானை வணங்கி இரும்பு சம்பந்தமான தொழில் செய்வோரும், வாகனங்கள் வழி தொழில் செய்வோரும், பக்திநெறி நின்று முருகப்பெருமானின் திருவடி பணிந்து பூஜித்து ஞானவழிக்கு வருவதுடன் தருமங்களைச் செய்து தருமபலம் பெருக்கி வருவதுடன் ஆறுமுக அரங்கமகான் உலகினில் அவதரித்த நோக்கத்தை அறிந்து உணர்வதுடன் அரங்கனின் புகழை உலகின் எல்லா தேசங்களிலும் பரப்பி வர, ஞானயுக மாற்றம் அனைவரும் அறியும்படி விரைந்து உலகினில் உருவாகும், ஞானயுக மாற்றம் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரால் விரைந்து நடந்திடும்.

**உலகை மாற்றவே அருள் ஞானச்சுடராக மகா ஞானியாக முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்த அடயோகி, ஞானத்தலைவனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே உமது அருளைப் பெற பெற, இந்த கலியுகமே கடைத்தேற்றம் பெற்று ஞானயுகமாக மாறிடும்** என சனி பகவான் தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார்.

–சுபம்–